DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC.No.198/2022
Prosecution witness – P.W.4

| | | |
|---|---|---|
| Name | : திரு.ராமமூர்த்தி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1, A2 present)
**25.05.2026- 03.03 PM**
<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கமுதி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் இறுதி கட்ட விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்த கமுதி காவல் நிலையித்தில் பணியாற்றிய சார்பு ஆய்வாளர் திரு.பிரகாஷ் என்பவர் தற்போது பணிமாறுதலாகி சென்றுவிட்டார்.

2. சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பிரகாஷ் என்பவர் கடந்த 09.08.2021ம் தேதி 11.00 மணிக்கு நிலைப்பொறுப்பில் இருந்த போது அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையக் குற்ற எண்.618/2021 இ.த.ச. பிரிவுகள் 147, 148, 294(b), 323, 506(2), 427 –ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த **புகார் மனு அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் அன்றைய தினமே 11.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நரசிங்கம் மற்றும் தமிழரசி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சம்பவ சாட்சிகளான பட்டியல் சாட்சிகளான 1 முதல் 3 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தேடிவந்த நிலையில்

எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன்பிணை பெற்றபடியால் கைது நடவடிக்கை மேற்கொள்வில்லை.

4. பின்னர் அடையாளம் தெரியாத 10 நபர்கள் என்று கூறியதால் அவர்களை நீக்கம் செய்து சட்டப்பிரிவினை 147, 148, 294(b), 323, 506(2), 427 என்பதிலிருந்து 294(b), 323, 506(2), 427 ஆக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. பின்னர் 21.09.2021 ம் தேதி அத்துடன் வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(2), 427–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. நான் சொல்வது போல் புலன் விசாரணை அதிகாரி புகார் மனு பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

2. அ.சா.1 அளித்த பொய்யான புகார் மனுவைப் பெற்று சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றார் போல் ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.25 18:41:20 +0530